☎ 04175 - 236654 / 235295
# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)
Accredited with "B+" GRADE by NAAC in Cycle 1
Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

08.03.2023

## திருவண்ணாமலை சண்முகா கல்லூரியில் உலக மகளிர் தின விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் உலக மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள எஸ்.எஸ்.மருத்துவமனையின் மகப்பேறு மற்றும் பெண்கள் நல மருத்துவர் **கே.அனுராதா** அவர்கள் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை தாங்கினார், செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்** தொடக்கவுரையாற்றினார், பொருளாளர் **எ.ஸ்ரீதர்**, அறக்கட்டளை உறுப்பினர்கள் **பி.கலைமணி, எஸ்.ஜெயா சக்திகுமார்** மற்றும் கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் **அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக, கல்லூரி முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். மின்னணுவியல் துறைத்தலைவர் **ஜி.சரளா** மற்றும் உயிர்வேதியியல் துறைத்தலைவர் **எம்.சுதா** ஆகியோர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தார்கள். தமிழ்த்துறைப் பேராசிரியர் **ஆ.பியூலா சுசீலா** நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார்.

இவ்விழாவில் மருத்துவர் **கே.அனுராதா** அவர்கள் பேசுகையில் "பெண்கள் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது, பழவகைகள், கீரை வகைகள் போன்றவற்றை உட்கொண்டு தங்கள் உடல்நலனைப் பேணவேண்டும். பெண்களை மதிப்புடன் நடத்த வேண்டும் என ஒரு தாய் தான் தன் மகனுக்கு அறிவுரை கூறி வளர்க்க வேண்டும், பெண்புத்தி பின்புத்தி தான் என்று பெரியவர்கள் கூறுவார்கள் ஏனென்றால் அவர்கள் பின்னால் நடப்பதையறிந்து முன்னால் சொல்வதால் தான் என்று மாணவியர்களிடையே சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியின் நிறைவில் கணிதத்துறைப் பேராசிரியர் முனைவர் **இ.பூங்கோதை** நன்றியுரையாற்றினார். இவ்விழாவில் அறக்கட்டளை உறுப்பினர்கள், துறைத்தலைவர்கள், இருபால்பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

செயலர் மற்றும் தாளாளர்


சண்முகா தொழிற்சாலை
கலை அறிவியல் கல்லூரி
26
EXCELLENCE
EDUCATION
உலகை நகர்த்தும் இயற்கையின் வரம்